# நட்பு - FRIENDSHIP



உண்மையான நட்பு தளிராக இருக்கும் நேரங்களில் சோதிக்கும், வெறுக்க வைக்கும், சாட வைக்கும், புரட்டிப்போடப்பார்க்கும்...
உண்மையான நட்பின் புரிதல் அதிகரிக்க அதிகரிக்க,
அந்த நட்பு நம்மை
ஆராதிக்கும், நல்ல துணையாக எப்பொழுதும் நிழல் போல தொடரும்
தாயாக மதிக்கும், சேயாக அன்பு செலுத்தும், உடன் பிறப்பாக பாதுகாக்கும்...
துன்பம் என்று வரும் பொழுது முன்னே வந்து அரணாக நிற்கும்...

நட்பை மதிக்கத் தெரிந்தவர்கள் மிகச்சிலரே...
ஒரு உயர்ந்த ஸ்தானத்தை கொடுப்பவர்களும் மிகச்சிலரே...
நட்பு காணக் கிடைக்காத அரிதான ஒரு பொக்கிஷம்...
கொடுக்க கொடுக்க குறையாத அக்ஷயப்பாத்திரம்...

அதனை யாரிடம் தேட வேண்டும் என்று தெரிந்துக்கொள்வது ஒ
ரு கலை...
அப்படி தேடி கிடைத்த ஒன்றை பாதுகாதுக்கொள்வதற்கு ஈடு இ
ல்லை...

"ஆத்மார்த்தமான நட்பின் புதிய பரிமாணம் இந்த அழகிய
மலர்களின் மூலம் மீண்டும் மீண்டும் புஷ்பிக்கட்டும்..."
என்று நான் அன்று எழுதிய வரிகள்...
என் பேனாவிலிருந்து வந்த வரிகள் அல்ல
என் ஆன்மாவிலிரிந்து வந்த வரிகள்...

இந்த நட்பு என்கிற வேரூன்றி ஆழமாக தழைத்து நிற்கும்
ஆலவிருக்ஷம்
வெட்டப்படாமலும், பட்டுப்போகாமலும் பாதுகாக்க, புரிதல்
என்கிற உரத்தினை பயன்படுத்தி அதனை அழிவிலிரிந்து
புதுப்பிக்க ஒரு சிறிய முயற்சி இந்த மடல்...

நட்பு - புரிதலின் உச்சம்
பகிர்தலின் உச்சம்
அழகின் உச்சம்
ஆன்மாவின் உச்சம்
இவை அனைத்தும் சாத்தியம்,
நட்பு உண்மையாகும் பட்சம்...

அதற்கு தேவை பொறுமையும், கால அவகாசமும்...
காத்துக்கொண்டிருகிறேன் இந்த விருக்ஷம் அருமையான
சுவையான கனிகள் கொடுக்கும் என்று – பொறுமையுடனும்,
நம்பிக்கையுடனும்...

ஒரு ஆத்மார்த்தமான அழகான நட்பை நாடும் –

GAYATHRI RAMESH
GRD IYERS

GRD IYERS